***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***Crl.M.P.No.147/2026 – P.W.1***

| | |
|---|---|
| *Name* | கணேசன் |
| *Father/Husband's Name* | வீராச்சாமி |
| *Village* | பரவாக்கோட்டை |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Religion* | |
| *Age* | *48* |

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 21.04.2026*

***மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை***

1. நான் உள்ளிக்கோட்டை கிராமத்தை சேர்ந்த தனியரசன் மகன் கவியரசன் என்பவரிடம் ரூ.11 லட்சமும், அசல் பாஸ்போர்டை கனடா நாட்டிற்கு என்னை அனுப்பி வைப்பதற்காக கொடுத்தேன். அதன் பின்னர் விசா எடுத்துக்கொடுத்து டெல்லி வரை அனுப்பி வைத்தார். 4 மாதங்கள் அங்கு இருந்து மீண்டும் பராவாக்கோட்டைக்கு வந்துவிட்டேன். அவர் கொடுத்த விசா அசல் இல்லை என்பதால் ஊருக்கு வந்துவிட்டேன். அதன் பிறகு பரவாக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். எந்த நடவடிக்கையும் இல்லாததால் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். அங்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கதால் இந்நீதிமன்றத்தில் பிரிவு 175(3) BNS கீழ் உரிய விசாரணைக்கு உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்தேன்.

2. கடந்த 07.10.2025-ம் தேதியன்று Cr.M.P.No.795/2025 இந்நீதிமன்றத்தில் உத்தரவு பிறக்கப்பட்டது. அந்த உத்தரவிற்கும் காவல் துறையினரால் நடவடிக்கை எடுக்கவில்லை. சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் அடிக்கடி என்னை அழைத்து கவியரசனுடன சமாதானம் போக சொல்லி வழக்கை சமாதானம் செய்துக்கொள்ள சொன்னார். அதற்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் நீ என்ன ஆள் புண்டையா என்று திட்டி உன் குடும்பத்தை வீதியில் நிறுத்துகிறேன் என்று சொல்லி மிரட்டினார். கடந்த 05.02.2026-ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் எனது வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றை எடுத்து வரும்படி சொன்னார். நான்

என் மனைவியை எடுத்துச் செல்லும்படி சொன்னேன். அன்றையதினம் மாலை 5.50 மணிக்கு நான் வீட்டிற்கு வந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் என் வீட்டில் நின்றுக்கொண்டிருந்தார். நான் அங்கு சென்றவுடன் போன் செய்தால் எடுக்கமாட்டியா என்று திட்டி, பைக்கில் நின்றபடியே என் கன்னத்தில் ஓங்கி அறைந்தார். என் சட்டையை பிடித்து இழுத்ததால் சட்டை பட்டன் அறுந்து நான் கீழே விழுந்துவிட்டேன். அப்போதும், அதே கெட்ட வார்த்தையை எனது மனைவி, எனது அம்மா, தெருவிலுள்ள நபர்கள் குழந்தைகள் முன்பாக சொல்லி திட்டினார். அவர் என்னை பிடித்து கீழே தள்ளியதில் எனக்கு விலா பக்ககத்தில் வலி இருந்தது. மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தேன். மறுநாள் திருவாரூர் காவல் கண்காணிப்பாளரிடம் நடந்ததை சொன்னேன். எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் சிறப்பு உதவி ஆய்வாளர் சிவகுருநாதன் என்பவரை வரவழைத்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 21.04.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.